**<u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>**

| M.C.O.P. No. 10/2018 | Date : 24.11.2023 | PW1 |
|---|---|---|
| Name: கண்ணன் | S/o. **ஜெகநாதன்** | |
| Evidence Recorded Time: 12.21 P.M. to 12.400 P.M. | | |

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1ம் எதிர்மனுதாரர் விமலா என் மனைவி என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் கௌரிசங்கர் என் மகன் என்றால் சரிதான். எனக்கு இரண்டு மகன்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது மூத்த மகன் பெயர் தணிகைநாதன் என்றால் சரிதான். இளையமகன் பெயர் 3ம் எதிர்மனுதாரர் கௌரிசங்கர் என்றால் சரிதான். TN 52 T 5997 விபத்து எப்போது நடைபெற்றது என்றால் 29.12.2017–ம் தேதியன்று விபத்து ஏற்பட்டது. அப்போது TN 52 T 5997 பதிவெண் கொண்ட டிவிஎஸ் ஜுப்பிட்டர் ஸ்கூட்டர் உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர் ஆகிய என் மனைவி என்றால் சரிதான். விபத்திற்கு யார் காரணம் என்றால் 3ம் எதிர்மனுதாரர் கௌரிசங்கர் தான் காரணம்.நான் தாக்கல் செய்த மனுவில் 29.12.2017–ம் தேதியில் கௌரிசங்கர் என்பவர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், சாலை விதிமுறைகளை மதிக்காமலும் சென்ற காரணத்தினால்தான் சிறு பாலத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 29.12.2017–ம் தேதி நான் உள்ளூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அன்று இரவே சேலம் நியூரோ பவுண்டேசன் மருத்துமவனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் 30.12.2017–ம் தேதியன்று நான் கோவை மெடிக்கல்ஸ் மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு 18.01.2018ம் தேதியன்று சிகிச்சையில் இருந்து திருப்பினேன். முழுவதுமாக குணமடைந்த பின்னர்தான் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டேன் என்றால் சரிதான். மேற்படி பதிவெண் கொண்ட வாகனத்தை ஓட்டி சென்ற என் மகன் 3ம் எதிர்மனுதாரருக்கு எந்த விதமான காயமும் இல்லை என்றால் சரிதான். 18.01.2018–ம் தேதியன்று டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட பிறகு எப்போது புகார் கொடுத்தேன் என்றால் சிகிச்சை முடிந்து

வீடு திரும்பிய பின் நல்லநிலைமையில் 22.01.2018–ம் தேதியில் எடப்பாடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். விபத்து நடைபெற்ற தேதியில் இருந்து நான் புகார் கொடுத்த தேதி வரை 3ம் எதிர்மனுதாரர் நல்லநிலைமையில் தான் இருந்தார் என்றால் சரிதான். கௌரிசங்கள் எடப்பாடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கலாம் என்றால் சரிதான், ஆனால் அவர் புகார் கொடுக்கவில்லை. ஒரு மாத காலத்தில் கௌரிசங்கர் புகார் கொடுக்காததற்கு குறிப்பிட்டு சொல்லக்கூடிய காரணங்கள் உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த நிரூபண பிரமாண பத்திரத்தை படித்து பார்த்து தாக்கல் செய்தேனா என்றால் படித்து பார்த்துதான் தாக்கல் செய்தேன். நிரூபண பிரமாண பத்திரத்தில் உள்ளசங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும். அதில் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் எடப்பாடி அருகே எதிரே வந்த வண்டியின் முகப்பு விளக்கின் வெளிச்சம் அதிகமாக இருந்ததால் வண்டி ஓட்டிச் சென்ற என் மகன் இடது புறம் இருந்த சிறிய மோரியில் வாகனத்தை மோதி இந்த விபத்து ஏற்பட்டது. மேற்படி விவரத்தை என் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். மனுவில் என் மகன் வேகமாக ஓட்டிச் சென்று விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல விபத்து நடந்தது என்று எனக்கு தெரியவில்லை என்றாலும், நான் முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அதன் அடிப்படையில் என் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. என் மகன் மற்றும் என் மனைவி தாக்கல் செய்த பதிலுரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் அதுபற்றி தெரியவில்லை. பதிலுரையில் 3ம் எதிர்மனுதார் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், அதிவேகமாகவும் சென்று விபத்து ஏற்படுத்தியுள்ளார் என்று சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியாது. விபத்து நடந்த 29.12.2017ம் தேதியில் நானும் என் மகன் கௌரிசங்கரும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். தலைக்கவசம் அணியாமல் சென்றதால்தான் எனக்கு தலையில் அடிபட்டது என்றால் சரியல்ல. மருத்துவமனையில் என்னை யார் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றால் 1ம் எதிர்மனுதாரர் என் மனைவிதான் சேர்த்தார். மருத்துவமனை கோப்புகளில் விபத்து மற்றொரு இரு சக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்ட மற்றொரு இருசக்கர வாகனத்தின்

பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விபத்தில் சம்மந்தப்பட்ட மற்றொரு இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம், ஓட்டுநர், உரிமையாளர் ஆகியோரை இந்த மனுவில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். TN 52 T 5997 என்ற வாகனத்திற்கு பின்னால் அமர்ந்து செல்லும் நபர்களுக்கு காப்பீடு செலுத்தவில்லை என்றால் சரியல்ல. மேற்படி இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு Act policy என்றாலும் pakage policy இல்லை என்றாலும் சரியல்ல. மருத்துவ பில்களை நான் இன்சூரன்ஸ் மூலம் கிளைம் செய்துள்ளோனா என்றால் இல்லை. எனக்கு ஏற்பட்ட மருத்து செலவிற்கான பில்களை இன்சூரன்ஸ் நிறுவனம் மூலம் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு பெற்றுக்கொண்டதை மருத்துவமனையை விசாரித்தார் தெரிந்துவிடும் என்றால் சரியல்ல. நான் கெம்பிளாஸ்ட் நிறுவனத்தில் பணிபுரிந்து தற்போது பணியில் இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். எனக்கு தற்போது 62 வயதாகிறது. மேட்டுர் இந்திரா நகரில் உள்ள எனது வீட்டிலிருந்து நான் நீதிமன்றத்திற்கு எவ்வாறு வந்தேன் என்றால் நடந்துதான் வந்தேன். நான் தற்போது நல்ல நிலைமையில் தான் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல, நீண்ட நேரம் நிற்க முடியாது, தலைசுற்றல் வரும். இருசக்கர வாகனத்தில் வேகமாக வரும் போது என் மகனிடம் மெதுவாக போகுமாறு கூறினேனா என்றால் இல்லை. நான் மனுவில் உண்மைகளை சொல்லாததாலும், நான் சிகிச்சைக்கான பில் தொகைகளை பெற்றுக்கொண்டதாலும் என் மனு 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. விபத்திற்கு என் மகன்தான் காரணம் என்று சொல்லியுள்ளதால் 2ம் எதிர்மனுதார் எந்த வித இழப்பீடும் தர கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.